எனது இலக்கம் : ஓஆ /ஆலோச/ கடி.இல.06/2016

2016.06.02

சகல மாவட்டச் செயலாளர்கள்,

சகல பிரதேச செயலாளர்களுக்கும்,

## வெளிநாட்டு ஓய்வூதியர்களின் காதிகக்கோவைகளை கொடுப்பனவுக்காக ஓய்வூதியத் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தல்.

2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ஓய்வூதியக் கொடுப்பனவுமைத்தினை ஒருங்கிணைப்பதன் கீழ் சகல ஓய்வூதியங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுமுறைமைகள் யாவும் மையப்படுத்தப்பட்ட தரவு நிலையமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும். 2014 செப்டம்பர் மாதத்துக்கு முன்னர் வெளிநாட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்ட வெளிநாட்டு ஓய்வூதியர்கள் சம்பந்தமாக விபரங்கள் கேந்திர தரகுமையத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

02. எனவே 2014 செப்டம்பர் மாதத்துக்கு முன்பு ,வெளிநாடு சென்ற ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் மாதாந்த ஓய்வூதியச் சம்பளம் வழங்குவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவுக்கு காதிதக் கோவைகளைச் சமர்ப்பிக்கும் போதுகீழ்க் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் அவதானமாய் இருத்தல் வேண்டும்.

01. ஓய்வூதியர்களின் ஓய்வூதியச் சம்பளம் இடை நிறுத்தப்பட்ட திகதி.
02. வெளிநாடு சென்றிருந்த காலத்தில் இலங்கைக்குதிரும்பவும் வருகைதந்துஓய்வூதியச் சம்பளம் பெற்றுள்ளாரா என்பது பற்றி
03. வங்கிக்கணக்கு மாற்றமாயிருப்பின் அக்காலப் பகுதியும் வங்கியின் பெயரும்.

03. 2014 செப்டம்பர் மாதத்துக்கு முன் வெளிநாடு சென்று திரும்பிவந்த ஓய்வூதியர்களின் காகிதக் கோவைகள், ஓய்வூதியத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படும் போது இணைப்பு 01இன் படிவத்துக்கமைய அந்தந்த வருடங்களுக்குறிய மாதாந்தம் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படாத ஓய்வூதியம் சமபந்தமான விபரங்களை உறுதிப்படுத்தி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

04. காணாமற்போயுள்ள காகிதக் கோவைகள் சமபந்தமாக 13/2001 ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஏ.ஜக்த் டி. டயஸ்,

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள் :

01. செயலாளர் - அரச பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சு
02. செயலாளர் – உள் நாட்டலுவல்கள் அமைச்சு
03. கணக்காய்வாளர் நாயகம் - உரிய நடவடிக்கைக்காக

இணைப்பு 01

....................... திகதி முதல் .................... திகதி வரை ஓய்வூதியக் கொடுப்பனவு அறிக்கை

| வருடம் | மாதம் | ஆரம்பச் சம்பளம் | வாழ்க்கை செலவுக் கொடுப்பனவு | ஏனைய கொடுப்பனவு | செலுத்தப்பட்டுள்ளது. | | செலுத்தப்பட வில்லை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வங்கியின் பெயர் | வங்கிக் கணக்கு அல்லது வவுசர் இலக்கம் | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

ஓய்வூதிய ஆலோசனைக் கடித இலக்கம் 6/2016 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் மேற் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானதென உறுதிப்படுத்துகின்றேன்.

தயாரித்தவர் :

பரிசீலித்தவர் :

பிரதேசசெயலாளர் / கணக்காளர்.